www.ecourtsindia.com

**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், விரைவு நீதிமன்றம் எண்.1, ஈரோடு.**

**நாள் : 04.04.2025** **1** **STC 16/2024**

**பெயர் : ரங்கநாதன் - எ.சா.1**

**புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

**1.** நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10ம் வகுப்பு படித்துள்ளேன். பு.சா.ஆ.1 - காசோலையில் உள்ள கையொப்பம் யாருடையது என்றால் என்னுடையதுதான். வழக்கு காசோலைக்கு வங்கியில் காசோலை நிறுத்த கடிதம் கொடுத்தேனா என்றால் இல்லை. வழக்கு காசோலையை வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்ய கூடாது என புகார்தாருக்கு சட்ட அறிவிப்பு அல்லது தனிப்பட்ட முறையில் கடிதம் அனுப்பினேனா என்றால் இல்லை. வழக்கு காசோலையை புகார்தாரர் தவறாக பயன்படுத்தியதாக காவல் நிலையத்தில் புகார் ஏதாவது கொடுத்தேனா என்றால் இல்லை.

**2.** வழக்கு காசோலைக்கு உண்டான தொகையை நான் செலுத்திவிட்டேன் என்றும் காசோலையை திரும்ப தரசொல்லி புகார்தாருக்கு அறிவிப்பு ஏதாவது கொடுத்தேனா என்றால் இல்லை. நான் புகார்தாரரின் சகோதரரிடம் 2017-2018ல் ரூ.1 லட்சம் கடன் வாங்கியதாக சொல்வதற்கு ஆதாரம் ஏதாவது உள்ளதா என்றால் இல்லை, எவ்வளவு கடன் வாங்கியதாக சொல்கிறேன் என்றால் ரூ.50 ஆயிரம் கடன் வாங்கினேன். எந்த தேதியில் கடன் வாங்கினேன் என்றால் தேதி ஞாபகம் இல்லை.

**3.** ரூ.50 ஆயிரம் கடன் வாங்கியதாக சொல்லியுள்ளேன் அதற்காக வழக்கு காசோலையை கொடுத்தேனா என்றால் இல்லை, வீட்டிற்கு வந்து எடுத்து சென்றுவிட்டார்கள். அதற்காக காவல் நிலையத்தில் புகார் ஏதாவது கொடுத்தேனா என்றால் இல்லை. எந்த தேதியில் அவ்வாறு காசோலையை எடுத்து சென்றார்கள் என்றால் சரியாக ஞாபகம் இல்லை. ரூ.50 ஆயிரம் கடன் வாங்கியதையும், காசோலையை என் வீட்டிற்கு வந்து எடுத்து என்ற விபரத்தையும் என் முதல் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

Judicial Magistrate,
Fast Track Court No.I,
Erode.

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNED150001992024/truecopy/order-4.pdf

பெயர் : ரங்கநாதன் - எ.சா.1

**4.** காசோலையை கையொப்பம் போட்டு வைத்திருந்தேனா என்றால் கையொப்பம் செய்து டேபிள் மேல் வைத்திருந்தேன், ரூ.50 ஆயிரம் பணம் கொடுக்கவேண்டியதற்காக காசோலையை சிவகுமார் எடுத்து சென்றுவிட்டார். நான் கடன் வாங்கியது சிவக்குமாரின் தம்பியிடமா என்றால் இல்லை. சிவக்குமாரின் தம்பி யார் என்று தெரியுமா என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள எ.சா.ஆ.1ல் 16.09.2020ல் ரூ. 1,61,000/-க்கு வனிதா, ஜானகிக்கு கிரையம் கொடுத்தாக கண்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு தெரியாமல் என் மனைவியை சிவக்குமார் அழைத்து சென்று ஜானகி பெயரில் கிரையம் வாங்கியுள்ளார்.

**5.** எ.சா.ஆ.1 ஆவணத்தில் நான் கொடுக்க வேண்டிய கடனுக்காக கிரையம் எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது என் கண்டுள்ளதா என்றால் இல்லை. எனக்கு எப்போது கிரையம் பெற்ற விபரம் தெரியும் என்றால் சரியாக ஞபாகம் இல்லை. 1 வருடம் கழித்துதான் தெரிந்து கொண்டேன். இது சம்மந்தமாக என் மனைவி என்னிடம் சொன்னரா என்றால் கிரையம் முடிந்து 1 மாதத்தில் சொன்னார். இது சம்மந்தமாக போலீசில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. சார்பதிவாளர் அலுவலகத்தில் கட்டாயப்படுத்தி கிரையம் பெற்றதாக மனு கொடுத்தேனா என்றால் இல்லை.

**6.** எப்போது என்னுடைய காசோலையை எடுத்து சென்றதாக சொல்கிறேன் என்றால் கிரையத்திற்கு முன்பே எடுத்து சென்றுவிட்டார். நான் கொடுக்க வேண்டிய பணத்திற்காக காசோலையை எடுத்து சென்று விட்டார்கள், இடத்தை எழுதி பெற்றுக்கொண்டார்கள் என சொல்கிறேன், எனக்கு காசோலையை திரும்ப பெற நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. 2017-2018ல் ரூ.1 லட்சம் புகார்தாரரிடம் கடன் பெற்ற போது காசோலையில் கையொப்பம் மட்டும் செய்து கொடுத்தாகவும், வட்டி கட்டியதாகவும் காட்டுவதற்கு ஆவணகள் ஏதாவது உள்ளதா என்றால் இல்லை. 26.08.2023ல் ரூ.4,50,000/- என்னுடைய குடும்ப மற்றும் வியாபார செலவுக்காக வழக்கு காசோலையை புகார்தாரரிடம் கொடுத்திருந்தேன் என்றால் சரியல்ல.

Judicial Magistrate,
Fast Track Court No.I,
Erode.

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNED150001992024/truecopy/order-4.pdf

www.ecourtsindia.com

www.ecourtsindia.com



**பெயர் : ரங்கநாதன் - எ.சா.1**

**7.** மேற்படி காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்தபோது என் வங்கி கணக்கில் போதிய பணமில்லை என திரும்பி வந்துவிட்டது என்றால் சரிதான். நான் கொடுக்க வேண்டிய கடனுக்காக 24 சதவீதம் வட்டி கொடுப்பதாக ஒப்புக்கொண்டு கடன் வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. சட்ட அறிவிப்பு புகார்தாரர் அனுப்பியிருந்தாரா என்றால் எனக்கு சட்ட அறிவிப்பு வரவில்லை. என் முகவரி எம் 70, மாணிக்கம்பாளையம், ஹவுசிங் யூனிட், ஈரோடு 11 எனது முகவரி என்றால் அந்த முகவரியில் குடியிருந்து பின்னர் மாறிவிட்டேன். முகவரி எந்த வருடம் மாறினேன் என்றால் 2017-2018ல் மாறியிருப்பேன்.

**8.** சட்ட அறிவிப்பு அனுப்பியபோது நான் புகாரில் சொன்ன முகவரியில் தான் குடியிருந்தேன் என்றும், தப்போது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. புகார்தாரரிடம் பெற்ற கடனுக்காக வழக்கு காசோலையை கொடுத்துவிட்டு 26.08.2023ல் ரூ.4.50 லட்சம் கடன் வாங்கினேன் என்றால் இல்லை. ஜானகி என்பவர் ரூ.1,61,000/-ம் கொடுத்துஎ.சா.ஆ.1 கிரையம் பெற்றுள்ளார் என்றும் வழக்கிற்காக என் மனைவியை கூட்டி சென்று கிரையம் பெற்றதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**9.** சட்ட அறிவிப்பு நான் வாங்கிகொள்ளாமல் திருப்பி அனுப்பிவிட்டேன் என்றால் சரியல்ல. நான் வெட்டுக்காட்டு வலசில் கடந்த 2023ம் வருடம் 24 தறிகள் குத்தகைக்கு எடுத்து ஓட்டி வந்தேன் என்றால் இல்லை, நான் கூலி வேலைக்கு தான் செல்கிறேன். நான் தறிகள் குத்தகைக்கு எடுப்பதற்காக வழக்கு காசோலை தொகை கடன் வாங்கினேன் என்றால் சரியல்ல. நான் தற்போது சொல்லும் காரணங்கள் எல்லாம் வழக்கிற்காக ஏற்படுத்தப்பட்டவை என்றால் சரியல்ல.

MUNIKUMAR G

Digitally signed by MUNIKUMAR G
Date: 2025.04.04 05:09:03 +0530

Judicial Magistrate,
Fast Track Court No.I,
Erode.

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNED150001992024/truecopy/order-4.pdf